சுருக்கம்

இயக்குநர் குழுமம் – திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் இயக்குநராக நியமனம் செய்தும், மற்றும் நிறுவனத்தின் பங்குகளை அவரது பெயருக்கு மாற்றம் செய்தும் ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை

அரசாணை (பத்தாண்டுகள்) எண்.419 நாள்: 28.08.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (வாலாயம்)எண். 2828, பொது (சிறப்பு ‘ஏ’ பிரிவு)த் துறை, நாள் 15.07.2010.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் கடித எண்.1545/சி2/2009, நாள் 26.07.2010 மற்றும் 28.07.2010.

******

ஆணை:-

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலாளராக நியமனம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளராக பணியாற்றி வந்த திரு. க. அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்களுக்குப் பதிலாக புதியதாக பணிப் பொறுப்பேற்றுள்ள திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் குழும இயக்குநர்களில் ஒரு இயக்குநராக நியமனம் செய்து ஆணைகள் வெளியிடுமாறும், முன்னாள் முதன்மைச் செயலாளர் பெயரில் இருந்த நிறுவன பங்குகளை தற்போது புதிய இயக்குநராக நியமனம் செய்யப்படும் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்களது பெயரில் மாற்றம் செய்து ஆணைகள் வழங்குமாறும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் கண்டுள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநரது கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொள்ளலாமென கருதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் ஒரு இயக்குநராக நியமனம் செய்தும், இத்துறையின் முன்னாள் முதன்மைச் செயலாளர்

திரு. க. அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்களது பெயரில் இருந்த தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பங்குகளையும் தற்போதைய முதன்மைச் செயலாளர், திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்களது பெயருக்கு மாற்றம் செய்யவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை –9.

திரு.க. அசோக் வரதன் ஷெட்டி,இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை –9.
அனைத்து உறுப்பினர்கள், தமிழ்நாடு மகளிர்
நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமம்.
(மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக )

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரது முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
முதன்மைச் செயலாளரது தனிச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை –9.
உதிரிக் கோப்பு/ இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.